**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.337/2025 இ.ம.எண்.

எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989-ம் ஆண்டு 19-வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.K.P.இளவரசி, முதன்மை சார்பு நீதிபதி, ஈரோடு அவர்களால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | M.சதாசிவம் | வட்டம் | : | மொடக்குறிச்சி |
| த/பெ | : | K.முருகையன் | மாவட்டம் | : | ஈரோடு |
| க/பெ | : | | தொழில் | : | |
| கிராமம் | : | வெங்கம்பூர் | வயது | : | 54 |

**வா.சா.1: முதல் விசாரணை**:-

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன்.

11.07.1997-ம் தேதியிட்ட ஒரு K.மணி என்பவர் 1-ம் பிரதிவாதி அய்த்தம்மாள் அவர்களுக்கு எழுதிக்கொடுத்த சூரம்பட்டி சார்பதிவாளர் அலுவலக சுத்தக் கிரைய பத்திர எண்.848/1997-ன் (சான்றிட்ட நகல்) **வா.சா.ஆ.1** ஆகவும், 01.12.2010-ம் தேதியிட்ட ஒரு K.பெருமாள் என்பவர் 2-ம் பிரதிவாதி C.ஆறுமுகம் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த சூரம்பட்டி சார்பதிவாளர் அலுவலக சுத்தக் கிரைய பத்திர எண்.4099/2010-ன் (சான்றிட்ட நகல்) **வா.சா.ஆ.2** ஆகவும், 18.02.2010-ம் தேதியிட்ட 1-ம் பிரதிவாதி அய்த்தம்மாள் வாதியாகிய எனக்கு எழுதிக் கொடுத்த சூரம்பட்டி சார்பதிவாளர் அலுவலக

சுத்தக் கிரைய பத்திர எண்.587/2011-ன் (சான்றிட்ட நகல்) **வா.சா.ஆ.3** ஆகவும், 11.01.2022-ம் தேதியிட்ட 1-ம் பிரதிவாதி அய்த்தம்மாள் வாதியாகிய எனக்கு எழுதிக் கொடுத்த சூரம்பட்டி சார்பதிவாளர் அலுவலக சுத்தக் கிரைய பத்திரத்தின் பிழைத்திருத்தல் பத்திர எண்.56/2012-ன் (பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல்) **வா.சா.ஆ.4** ஆகவும், 11.03.2011-ம் தேதியிட்ட 2-ம் பிரதிவாதி C.ஆறுமுகம் வாதியாகிய எனக்கு எழுதிக் கொடுத்த சூரம்பட்டி சார்பதிவாளர் அலுவலக சுத்தக் கிரைய பத்திர எண்.845/2011-ன் (பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல்) **வா.சா.ஆ.5** ஆகவும், 21.01.2025-ம் தேதியிட்ட கிராம நிர்வாக அலுவலர், சூரம்பட்டி & டவுன் கிராமம் அவர்கள் வழங்கிய சான்று நகல் (அசல்) **வா.சா.ஆ.6** ஆகவும், 11.08.2025-ம் தேதியிட்ட பதிவிறக்கம் செய்யப்பட்ட சூரம்பட்டி கிராமம் R.S.No.95-ன் புல வரைபட நகல் **வா.சா.ஆ.7** ஆகவும், 09.08.2025-ம் தேதியிட்ட அரசு வழிகாட்டி மதிப்பு **வா.சா.ஆ.8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.